**தலைப்பு 307 - மோட்டார் வாகனத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் வாகன திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**(அ) வருமானங்களின் பெறுவனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதி சொகுசு மோட்டார் வாகன வரிகள் தொடர்பில் 1995ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலும் நிலுவை வருமானத்தினை கணிப்பிடல் 2016ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகள் எதுவும் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த காலப்பகுதிக்குரிய சிலுவை வருமானம் எவ்வளவு என்பது தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய கணினிக் கட்டமைப்பினூடாக நிலுவை வரி வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியாது. அதன் காரணமாக கணினிக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல். |

எவ்வாறான போதிலும், 2009ஆம் ஆணடுக்கு முன்னரான 13 வருடங்களுக்காக அப்போது அறவிடப்பட்டிருந்த நிலுவை வரி வருமானம் ரூபா 34,898,108 ஆகும்.

**(ஆ) மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் செலவின மீதிகள், ஏசீஏ 2(ii) மாதிரிக்கமைய காசாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் ஏனைய அமைச்சு/திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவின மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 2,092,955,819 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | தவறொன்றின் காரணமாக அந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான செலவினம் காண்பிக்கப்பட்டிருந்தது. | புத்தகம் வைத்தல் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படல். |

### 1.6.2 நிதி நிலைமைக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 86,071,226 கூட்டுத்தொகையான 17 வாகனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நிலையான சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்களை நிலையான சொத்துக்களாக கணக்கு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் கணக்கு வைத்தல். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றின் செலவின மீதிகள், ஏசீஏ 2(ii) மாதிரியில் காசாக மேற்கொள்ளப்பட்ட செலவின மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 2,049,622,835 ஆன இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன. | இதன் பின்னர் பட்டோலைகளை சரியான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பட்டோலைகளின் மீதிகள், காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள உரிய மீதிகளுடன் இணங்க வேண்டும். |

### 1.6.4 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கட்டுநிதி சீராக்கல் கணக்கில் மாவட்ட அலுவலகங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் என பதிவு செய்யப்பட்ட நிலுவைகளை சிகாஸ் திட்டத்தின் கீழ் உள்ள நிலுவைகளுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 36,156,577 மற்றும் ரூபா 12,379,811ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன. | எதிர்கால கணக்கு தயாரிப்பில் இதுபோன்ற பிழைகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். ஆகும். | சரிசெய்தல் கணக்கிற்குப் பொருந்தும் எண்கள் மட்டுமே சரிசெய்யப்பட வேண்டும். |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203ஆம் அதிகாரம்) 6(அ) பிரிவிற்கமைய பதிவு செய்யப்பட்ட அனைத்து மோட்டார் வாகனங்களினதும் விபரங்கள் உள்ளடங்கும் வகையில் உரிய மாதிரிக்கமைய பதிவு செய்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்காமை. | கணினிக் கட்டமைப்பில் உள்ளடங்குகின்றமையால் பிரிதொரு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலவும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அனைத்து பதிவேடுகள், புத்தகங்கள், அறிக்கைகள் போன்றவற்றை பேண வேண்டும். |
| (ஆ) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203ஆம் அதிகாரம்) 18(8)(அ) பிரிவிற்கமைய இரத்துச்செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிராமை. | நிலவும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் அனைத்து பதிவேடுகள், புத்தகங்கள், அறிக்கைகள் போன்றவற்றை பேண வேண்டியமை. | அவ்வாறானதொரு பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.6 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது முன்வைக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 யூன் 30ஆந் திகதி வரையிலும் பதில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அந்த ஐயவினாக்களுக்கு உரியதாக மதிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 416,313,438 ஆகும். | இதன் பின்னர் தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்காய்வு ஐயவிாக்களுக்கு தாமதமின்றி பதில் வழங்குதல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 128(2)(ஈ) மற்றும் 01/2015ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 20ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 07ஆம் பந்திக்கமைய 04 வருமானக் குறியீடுகளுக்காக 2020ஆம் ஆண்டுக்கான கலாண்டு ரீதியான ஆண்டறிக்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 பெப்ரவரி 25ஆந் திகதி வரையிலும் உரிய பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, வருமானக் குறியீடொன்றின் கீழ் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காலாண்டு ரீதியான சருமான அறிக்கைகளை உரிய முறையில் சமர்ப்பிக்கின்றேன். காபன் வரி அறவிடுதல் பிரதேச செயலாளரின் ஓடாக மேற்கொள்ளப்படுகின்றமையால் நிலுவை வருமானத்தை கணிப்பிடுதல் நடைமுறைச் சிக்கலுக்குரியது ஆகும். | இலக்கிடப்பட்ட திகதிகளில் தாமதமின்றி அறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பித்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்த வருமான மதிப்பீட்டுக்கமைய, 04 வருமானக் குறியீடுகளின் திருத்தப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் வருமானக்கூற்றின் பிரகாரம் அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளுக்கிடையே ரூபா 1,012,000,000 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் நிலவின. | வருமானக்கூற்றின் மதிப்பீடுகள் 2019ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால், அதன் பிரகாரம் வருமானக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | கணக்கு கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய மீதிகளை சரியாக இனங்காண வேண்டியமை. |
| (இ) | அதிசொகுசு வரிகளுக்கான மீளாய்வாண்டின் நிலுவை வருமானக்கூற்றின் ஆரம்ப மீதியை, கடந்த வருடத்தின் இறுதி மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 426,827,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வருமான மீதியினை பதிவுசெய்யும் போது ஏற்பட்ட வழு காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | கடந்த வருடத்தின் மீதிகளை மீளாய்வாண்டிற்கு கொண்டு செல்லல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 01/2015ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 20ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 04ஆம் பந்திக்கமைய நிலுவை வருமானத்திற்காக முறையாக அறிக்கைகளை பேணுதல் மற்றும் நிலுவை வருமானம் மேலும் சேர்வதனை தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒட்டுமொத்த நிலுவை வருமானம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் தன்மையொன்று காணப்பட்டதுடன், 2016ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020ஆம் ஆண்டுக்கான நிலுவை வருமானத்திலான அதிகரிப்பானது 318 சதவீதமான அளவில் அதிகரித்திருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக நிலவும் கணினிக் கட்டமைப்பு போதுமானதாக இல்லாமையால், அந்தக் கட்டமைப்பை மேம்படுத்தி தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிக்கைகளை பேண வேண்டியமை மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிலுவை வருமானக்கூற்றுக்கமைய, 2020ஆம் ஆண்டினுள் அறவிடப்பட வேண்டிய ரூபா 313,528,052 ஆன நிலுவை வருமானம், மீளாய்வாண்டு, கடந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டு என வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் வகைப்படுத்துவதற்கு கணினிக் கட்டமைப்பினை நாளதுவரையாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உரிய முறையில் அறிக்கைகளை பேணுதல் மற்றும் நிலுவை வருமானத்தினை துரிதமாக அறவிடுதல். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 87 சதவீதம் எஞ்சியிருந்ததுடன், அந்த சேமிப்புகள் 42 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தன. எவ்வாறான போதிலும், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை இந்த நிதியேற்பாட்டிலான சேமிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | 07 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டில் 87 சதவீதம் எஞ்சியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். | மதிப்பீடுகளை நடைமுறைக்கு பொருத்தமானதாக தயாரித்தல். |
| (ஆ) | 04 செலவின விடயங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியின் 31 சதவீதம் முதல் 145 சதவீதத்திற்கு இடைப்பட்ட சதவீதம் நி.பி. 66 இன் ஊடாக மாற்றப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமையால் ஏனைய செலவின விடயங்களிலிருந்து நிதியேற்பாட்டினை மாற்றுவதற்கு நேர்ந்திருந்தது. | மதிப்பீடுகளை நடைமுறைக்கு பொருத்தமானதாக தயாரித்தல். |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறிப்பு – (iii) மாதிரிக்கமைய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கூற்றினைத் தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் சரியாக சமர்ப்பிப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிகள், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டுக்குரிய ரூபா 4,600,822 ஆன செலவினம் 2021ஆம் அண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த செலவினங்கள் பொறுப்புகளாக இனங்காணப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு குறித்துக்கொள்கின்றேன். | மீளாய்வாண்டுக்குரிய அனைத்து செலவினங்களும் உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று உருவாக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பில் காலத்திற்கு | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு திட்டவட்டமான காலப்பகுதியொன்றினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.4ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 42ஆம் பிரிவு | வாகனங்களை பதிவு செய்தல் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கணக்காய்வுத் தேவைக்கமைய கோரப்படும் தகவல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இதன் பின்னர் கோவைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச்சட்டம் (203ஆம் அதிகாரம்) | | | |
| (i) (3)18 ஆம் உப பிரிவு | 02 வருடங்களை கடந்த வருமான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் மாகாண அதிகாரிகளால் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அறிவுறுத்தும் வேலைத்திட்டமொன்று இல்லாதிருந்தமையால் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அந்த வாகனங்களின் பதிவினை இரத்துச்செய்வதற்க உள்ள இயலுமை இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் மாகாண அதிகாரிகளுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 18(7) உப பிரிவு | பதிவு இரத்துச்செய்யப்பட்ட வாகனங்களின் இலக்கத் தகடுகள் 07 நாட்களினுள் மீள ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இரத்துச்செய்யப்பட்ட 872 வாகனங்களின் இலக்கத் தகடுகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக பொருத்தமான செயல்நடைமுறையொன்றினை தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அந்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | 18(13) உப பிரிவு | வாகனங்களை இரத்துச்செய்தல் மற்றும் அவற்றை அகற்றுதல் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இரத்துச்செய்யப்பட்ட வாகனங்களை அகற்றுதல் மற்றும் அதற்காக பராமரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் தொடர்பில் அமைச்சரால் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிராமை அதற்கு காரணமாக அமைந்திருந்தது. | இதற்காக பொருத்தமான செயல்நடைமுறையொன்றினை தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அந்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |
| (iv) | 25(1) உப பிரிவு | வருமான அனுமதிப்பத்திரமொன்று இல்லாது வாகனமொன்றினை தம்வசம் வைத்திருக்க கூடாத போதிலும், 03 வாகனங்களின் முதல் பதிவுத் திகதியிலிருந்து 15 வருட காலமாக வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாமை சர்ச்சைக்குரிய விடயமாக காணப்பட்டது. | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலாவதியான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதங்கு முன்னர் இந்த திணைக்களத்திடம் விசாரிக்குமாறு மாகாண அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | 30(1)(ஏ)(III) உப பிரிவு | (i) | வாகனமொன்றின் முதலாவது பதிவுத் திகதி முதல் 03 நாட்களினுள் வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், 05 வாகனங்களுக்காக முதலாவது பதிவு திகதி முதல் 23 முதல் 27 வருடங்கள் வரையான நீண்ட காலமாக ஒரே தடவையில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலாவதியான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதங்கு முன்னர் இந்த திணைக்களத்திடம் விசாரிக்குமாறு மாகாண அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல். |
| | | (ii) | உற்பத்தி வருடம் முதல் 03 வருடத்திற்கு மேற்பட்ட பழமையான மோட்டார் வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்ய முடியாத போதிலும், உற்பத்தி வருடம் முதல் 07 முதல் 08 வருடங்கள் வரை பழமையான 02 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் சுங்கப் பரிசோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளமைக்கான | |

**2.6 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணமடைந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 536,749 தொகையான மீதிகளை தீர்ப்பனவு செய்யாதிருந்தமை தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாத்தின் 4ஆம் பந்திக்கு முரணாகியது. | தேவையான தகவல்களை தேடுதல் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. | அந்த மீதியை தாமதிக்கா தீர்ப்பனவு செய்தல். |
| (ஆ) | நி.பி. 485(4) மற்றும் இலக்கம் 89 மற்றும் 1993 ஒக்தோபர் 22ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சொன்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் இரண்டு மாதங்களினுள் தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அவ்வாறு தீர்க்கப்படாத 05 வருட காலப்பகுதியை விஞ்சியிருந்த ரூபா 226,230 ஆன 04 கடன் மீதிகள் காணப்பட்டன. | இந்த கடன் மீதி தொடர்பான தகவல்கள் தேடப்பட்டவாறு உள்ளது. | அந்த மீதியை தாமதிக்கா தீர்ப்பனவு செய்தல். |
| (இ) | ஓய்வூதியத்தினை இடைநிறுத்திய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 302,722ஆன கடன் மீதிகள் 05 வருடங்களை விட பழமையானது ஆகும். | சிலி தகவல்கள் ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. | உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | இறுதித் தவணை அறவிடப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த பணி நீக்கத்திற்கு உள்ளாகியிருந்த 19 | ஒரு கடன் மீதியொன்று அறவிடப்பட்டவாறு உள்ளது. ஏனைய கடன் மீதிகள் தொடர்பான தகவல்கள் தேடப்பட்டவாறு உள்ளது. | காலம் கடந்துள்ளமையால் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,330,463 ஆன கடன் மீதியை அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனிடையே 05 வருடங்களை கடந்த ரூபா 1,170,753 ஆன 17 மீதிகள் காணப்பட்டன. | | |
| (உ) | இறுதித் தவணை அறவிடப்பட்டு 05 வருடங்களுக்கு மேல் காலம் கடந்திருந்த சேவையை கைவிட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 234,042 ஆன கடன் மீதியை அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தருக்கு எதிராக சட்டரதியான நடவடிக்கை எடுப்பதற்கும், எஞ்சிய உத்தியோகத்தர்களின் தகவல்களை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | காலம் கடந்துள்ளமையால் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான கூட்டுமொத்தம் மற்றும் அத்திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரமான மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 2,359,113ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்குகளை பரிசோதனை செய்து தகவல்களை தேடி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | கொடுக்கல் வாங்கல்கள், உரிய ஆவணங்கள் மற்றும் மூல ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்து கணக்கு வைத்தல். |

**2.7 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு வைப்புக் கணக்கிற்கு உரிய 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 04 வருடங்களை கடந்த ரூபா 24,179,394 ஆன 12 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதியுரை நிறுவனத்திடமிருந்து அறிக்கை கிடைக்கும் வகையில் இந்த மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | நி.பி. 571(1) பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் காலாவதியான அனைத்து வைப்புக்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய ஒவ்வொரு அரையாண்டுக்கும் பட்டியல் தயாரிக்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல். |
| (இ) | 03 வைப்புக் கணக்குகளின் தனிப்பட்ட மீதிகளின் பட்டியலுக்கமைய, 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக மாவட்ட அலுவலகங்களில் காணப்பட்ட ரூபா 5,708,778 ஆன வைப்பு மீதிகளின் பகுப்பாய்வொன்று இல்லாதிருந்தமையால் அவை எந்தெந்த மாவட்ட அலுவலகங்களுக்கு உரிய எவ்வளவு பழமையான மீதிகள் தொடர்பில் உறுதிப்படுத்தல் தொடர்பில் சான்றினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | வைப்பு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான அறிக்கைகளை மாதாந்தம் பெற்றுத்தருமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவித்திருந்த போதிலும், அந்த அறிக்கைகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | தேவைக்கேற்ப பகுப்பாய்வுடனான அறிக்கைகளை தயாரித்தல். |
| (ஈ) | 01/2015ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 20ஆந் திகதிய அரச நிதிக் கொள்கைகள் சுற்றறிக்கையின் 04(இ) பந்தியின் பிரகாரம் வைப்புக் | தற்போது காணப்படும் ரூபா 295,260 ஆன மீதியை வருமானத்திற்கு செலவு வைப்பதற்க நடவடிக்கை எடுக்கின்றேன். | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கமைய செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

கணக்குகளில் காணப்படும் வருமானங்கள், அதற்கடுத்த மாதத்தின் முதல் வாரத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், மாகாண சபையொன்றுக்காக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் அதற்கமைய அனுப்பப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 550,687 ஆன ஆரம்ப மீதியொன்று எதிர்வரும் வருடத்திற்கு தாக்கம் செலுத்தும் வகையில் ஆண்டு முழுவதும் காணப்பட்டது.

## 2.8 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ-06 ஆம் இலக்க நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உப குறியீட்டு இலக்கம் 05 இற்கு வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,880,273ஆன உபகரணங்கள் அந்த குறியீட்டு இலக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமையை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றன். | கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் இனங்கண்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 2.9 வங்கி மீதிகளை செயற்படுத்தல்

வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றில் காணப்பட்ட ரூபா 970,612ஆன இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் ரூபா 6,994,558 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகளை தீர்ப்பனவு செய்த பின்னர் வங்கிக் கூற்றினை தயாரிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான சரியான தகவல்களை வங்கி இணக்கக்கூற்றுடன் சமர்ப்பிக்குமாறு வங்கி அறிவித்துள்ளது. | கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | வழங்கிய போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 06 மாதங்களை கடந்த ரூபா 2,238,324ஆன காசோலைகள் நி.பி. 396(ஈ) பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த பெறுமதியினுள் ஒரு வருடத்தினை விஞ்சிய ரூபா 490,693 ஆன காசோலையொன்றும் காணப்பட்டது. | உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்துகின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | மீளாய்வாண்டினுள் ரூபா 306,124,336 ஆன அதிசொகுசு வரி வருமானமொன்று செலவு வைக்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பான தகவல்கள், 5/2007 ஆம் இலக்க மற்றும் 2007 செப்தம்பர் 05 ஆந் திகதிய திறைசேரி செயற்பாட்டுத் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் அனைத்து வங்கிக் கணக்குகளையும் வெளிப்படுத்துகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்க வரியினை செலுத்தாது சட்டரீதியான முறையில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டினுள் சட்டவிரோதமான முறையில் பொருத்தப்பட்ட 33 வாகனங்களின் தரவுகள் திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பினுள் உட்செலுத்தி, அந்த வாகனங்களை சட்டப்பூர்வமான வாகனங்களாக இந்நாட்டில் பயன்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்டிருந்தமையால், அவற்றுள் 21 வாகனங்களுக்காக மாத்திரம் மொத்தமாக உற்பத்தி வரி, அதிசொகுசு வரி மற்றும் ஏனைய அரச அறவிடல்களாக ரூபா 558,640,627 ஆன வருமானம் அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்தது. அவ்வாறே, இந்த வாகனங்கள் தொடர்பில் ஆரம்ப ஆவணங்களை பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு. | இவ்வாறான முறைகேடுகளை தடுப்பதற்காக உள்ளக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. | அரசின் பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படாதவாறு செயற்படுவதற்கு தெவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளல். |
| | (i) மர்சிடீஸ் பென்ஸ் வாகனமொன்றை பதிவு செய்வதற்காக தற்போது பயன்பாட்டில் அல்லாத இலக்கம் 302 தொகுதியின் கீழ் காணப்பட்ட முன்னைய பதிவ இலக்கத்தின் தொடர்ச்சியிலிருந்து விடுபட்டிருந்த இலக்கமொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பழைய இலக்கமொன்றை புதிய இலக்கமாக தற்போது பதிவு செய்ய முடியாமையால் 2000ஆம் ஆண்டின் போது | இது தொடர்பில் புலனாய்வொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்யப்பட்ட டொயோட்டா கரீனா மாதிரியில் அமைந்த மோட்டார் வாகனமொன்றின் தரவுகள் அந்த பென்ஸ் வட்டியின் தரவுகளாக கணினிமயப்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்காக கடந்த 16 வருட காலமாக ஒரே தடவையில் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதிசொகுசு வரியினை செலுத்தாமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 307,500 ஆகும். | | |
| (ii) | 302ஆம் இலக்க தொகுதியின் 02 மோட்டார் வண்டிகளின் முதல் பதிவு தொடர்பான தரவுகள் மற்றும் உரிய சுங்கப் பதிவுகள் தொடர்பான தகவல்கள் எதுவும் கணினிக் கட்டமைப்பில் காணப்படவில்லை. | இது தொடர்பான விசாரணையொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (iii) | 02 பாரவூர்திகள் மற்றும் 02 பாரம் தூக்கும் இயந்திரங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்த சுங்க பதிவொன்றினைப் பயன்படுத்தி TOYOTA LEXUS, MITSUBISHI MONTERO PEJERO மற்றும் TOYOTA LAND CRUISER PRADO ரகத்திலான 03 அதி சொகுசு மோட்டார் கார்களை பதிவு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தமையால் இரசிற்கு இழக்கப்பட்ட இறக்குமதி தீர்வை வரி மற்றும் அதிசொகுசு வரி வருமானம் அண்ணளவாக ரூபா 141,174,339 ஆகும். இந்த வாகனங்கள் சுங்கத்தினால் ஏலமிடப்பட்ட வாகனங்கான பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை எதுவும் சுங்கத்தின் ஏலத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2020 யூலை முதல் இலங்கை சுங்கத்தினால் கணினி வலையமைப்பினூடாக தரவுகளை வழங்காத எந்த வாகனத்தையும் பதிவு செய்ய வேண்டாம் என உள்ளக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. சுங்க விசாரணைகளின் அடிப்படையில் இந்த வாகனங்களின் பதிவினை இரத்துச்செய்ய வேண்டும் எனின் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சுங்க தொடர்பு இல்லாதிருந்த மிட்சுபிசி ஜீப் வண்டியொன்று 2002 நவம்பர் 22ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த பதிவு இலக்கத்திற்கு முன்னர் மற்றும் பின்னரான இலக்கங்கள் முறையே 2002 நவம்பர் 22 மற்றும் 25ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட 02 முற்சக்கர வண்டிகள் காணப்படுவதுடன், இதற்குரிய சுங்கத் தொடர்பு (Custom Link) திணைக்களத்தின் கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே, அந்த வாகனத்திற்காக 2002ஆம் ஆண்டு முதல் 17 வருடங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்தி 2018ஆம் ஆண்டின் போது வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. முறைகேடு ஒன்று இடம்பெற்றுள்ளதெனின், மேலதிக நடவடிக்கைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்க அல்லது உரிய நிறுவனத்திற்கு ஈடுபடுத்தப்படும்.<br><br>அவ்வாறான பிரச்சினைகள் மீள ஏற்படாத வகையில் சுங்க மற்றும் DMT கணினிக் கட்டமைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. சுங்கத் தகவல்களுடன் இணங்கான எந்தவொரு வாகனமும் சுங்கத்திடம் விசாரிக்கப்படாது பதிவு செய்யாதிருக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (v) | 03 வாகனங்களை முறையற்ற விதத்தில் பதிவு செய்தமையால் அண்ணளவாக உற்பத்தி மற்றும் சொகுசு வரியாக ரூபா 114,597,000 தொகையான வருமானமத் அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்தது. அந்த வாகனங்களுக்குரிய சுங்கப் பதிவுகள் எவையும் கணினிக் கட்டமைப்பில் காணப்படாமை செஸி இலக்கம் தொடர்பில் எதுவித இறக்குமதி பதிவும் சுங்கத் தரவுகளினுள் காணப்படவில்லை என இலங்கை சுங்கத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தமை, முதல் பதிவு 2002ஆம் ஆண்டு என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருடம் முதல் ஒவ்வொரு வருடங்களுக்குமான வருமான அனுமதிப்பத்திரம் பெறுதல் 2018ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் | இது தொடர்பில் மேலும் ஆராயப்படுவதுடன், ஏதேனும் முறைகேடு இடம்பெற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டால் திணைக்களத்தின் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (vi) | 1992ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கைவிடப்பட்ட இலக்கங்களினை பயன்படுத்தி கணினிக் கட்டமைப்பினுள் தவறான தகவல்களை உட்செலுத்தி 05 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் ஒரு வாகனத்திற்காக ரூபா 4,249,600 ஆன உற்பத்தி வரி வருமானம் அரசிற்கு இழப்பாகியிருந்தது. 05 வாகனங்களுக்காக ரூபா 99,200 ஆன புதிய பதிவுக்காக கட்டணங்களும் அறவிடப்பட்டிராததுடன், ஒரு வாகனத்திற்காக அறவிடப்பட வேண்டிய சொகுசு வரித் தொகை ரூபா 295,000 ஆகும். | -மேற்படி - | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (vii) | முறையற்ற விதத்தில் பதிவு செய்யப்பட்ட 17 வாகனங்களில் 09 வாகனங்களுக்காக மாத்திரம் அண்ணளவாக உற்பத்தி வரி, சொகுசு வரி மற்றும் ஏனைய அரச கட்டணங்கள் மற்றும் வருமானமாக ரூபா 297,057,788 ஆன வருமானம் அரசிற்கு இழப்பாகியிருந்தது. அது தவிர, ஒழுங்குமுறையாக பதிவு இலக்கத்தினை வழங்காது ஏதேனும், சில இலக்கங்களை வெற்றிடமாக வைத்திருத்தல், பின்னர் அந்த வெற்று இலக்கங்களை பயன்படுத்தி வாகனங்களை பதிவு செய்தல், கணினிக் கட்டமைப்பின் துறை ரீதியான அறிக்கைகள் முழுமையற்றிருத்தல், 14 | -மேற்படி - | உரிய விசாரணையொன்றினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களின் முதல் பதிவு 1992 முதல் 1997ஆம் ஆண்டு வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், தரவுகளை கணினிமயப்படுத்தல்அதற்கு 08 முதல் 25 வருடங்கள் வரையான காலத்தின் பின்னர் மேற்கொள்ளல், அவ்வாறு கணினிமயப்படுத்தப்பட்ட பின்னர் அதனை அண்மித்த 10 நாட்களுக்காக முதலாவது வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றுள் 04 வாகனங்கள் உள்ளடங்களாக 05 வாகனங்கள் 23 முதல் 27 வருடங்கள் வரையான நீண்ட காலத்திற்கு ஒரே தடவையில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (viii) | கடந்த 18 வருடங்களுக்காக 2018ஆம் ஆண்டின் போது ஒரே தடவையில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்ற 302 தொகுதியின் மோட்டார் வாகனஅமான்றின் முதல் பதிவு 2006ஆம் ஆண்டாக கணினிக் கட்டமைப்பில் முறையற்ற விதத்தில் பதிவு செய்யப்பட்டமையால் ரூபா 652,500 ஆன அதிசொகுசு வரித் தொகை அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்தது. | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பெறுபேறுகளுக்கமைய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | உரிய விசாரணை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | அரசிற்கு சொந்தமான கெப் வண்டியொன்றின் பதிவு உரித்தானது பின்னர் தனிநபர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. அரசிற்காக இறக்குமதி செய்யப்பட்ட அந்த வாகனத்திற்காக 2013ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட ரூபா 3,175,774 ஆன சுங்க வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே, 2013ஆம் ஆண்டு முதல் இந்த வாகனத்தின் அனுமதிப்பத்திர | சாட்டுதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் எதுவித சட்ட பிரச்சினையும் இல்லாதிருந்ததுடன், வாகனம் உரிய ஓட்ட நிலையில் காணப்படாமைக்கான முடிவுக்கு வருவதற்கான காரணங்களும் காணப்படவில்லை என்பதை | விடுவிக்கப்பட்ட ரூபா 3,175,774 ஆன சுங்க வரித் தொகையை உரிய விசாரணையொன்றை மேற்கொண்டுஅவரிட மிருந்து அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரத்திற்கு உரியது வட மேல் மாகாணம் ஆன போதிலும், 2014ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலும் வருமான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் 2019ஆம் ஆண்டின் போது மேல் மாகாணத்தின் அனுமதிப்பத்திர அதிகாரசபையினால் ஒரே தடவையில் அறவிடப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (இ) | விசேட நிபந்தனைகள் எதனையும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் உள்ளடக்காது இரட்டை பணிகளுக்கான பதிவு இலக்கத்தின் கீழ் விசேட பணிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை பதிவு செய்வதமையால் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் 09 வாகனங்களுக்கு மாத்திரம் ரூபா 27,472,988 ஆன சுங்க வரித் தொகையொன்று அரசிற்கு இழப்பாகியிருந்தது. | அறவிடப்படும் சுங்க வரியின் அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்படாததுடன், இலங்கை சுங்கத்தினால் கணினிமயப்படுத்தப்பட்ட வாகனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்படும். இந்த வாகனம் மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் வகைப்படுத்தலுக்கு இணங்க பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைகேடு இடம்பெற்றுள்ளதா என தேடிப் பார்த்து அறிக்கையிடுவதற்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உரிய விசாரணையொன்றை மேற்கொண்டு அவரிடமிருந்து அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல். |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகன இலக்கத் தகடுகளில் மாகாண எழுத்தினை பொறிக்கின்றமையால் மாகாணத்திற்கு உரித்துடைய மாகாணத்திலிருந்து வெளியேறும் போது, புதிய இலக்கத் தகடுகள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். இந்த உழுத்தினை பொறிப்பதால்அந்த அச்சீட்டாளர் ஈட்டும் வருமானம் தவிர வேறு | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். எம்மால் இந்த விடயம் அவதானிக்கப்பட்டு பின்வரும் நடடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>2020.09.10ஆந் திகதி | அரச நிதி பாதுகாக்கப்படும் வகையில் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்த தரப்பினருக்கும் எதுவித பயனும் கிடைப்பதாக அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம், கடந்த 03 வருடங்களினுள் மாத்திரம் இவ்வாறு மாகாணங்களுக்கிடையில் மாற்றப்பட்ட 376,233 வாகனங்களின் இலக்கத் தகடுகளுக்காக அச்சீட்டாளருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 778,448,278 ஆன தொகையின் பயனுடைய தன்மை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. அவ்வாறே, இதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட தகடுகளுக்காக வருடாந்தம் அண்ணளவாக ரூபா 260 மில்லியனான அந்நிய செலாவணியும் செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சரவை பிரமாணக்குறிப்பிற்காக வாகன இலக்கத் தகடுகளை வழங்கும் நடைமுறை சேவை பெறுநர்களுக்கு இலகுவான முறையில் திட்டமிடல் எனும் தலைப்பில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தகடுகளை அச்சிட்ட கம்பனி 2019.05.01ஆந் திகதி முதல் 5 வருட காலத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் வாகன இலக்கத் தகடுகளை அச்சிடல் புதிய தொழில்நுட்பத்திற்கமைய அரச தொழிற்சாலையின் ஊடாக மேற்கொள்ள தேவையான இயலளவு அபிவிருத்தி மற்றும் வசதிகளை வழங்குவதற்கு திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது. | |
| (ஆ) | வாகனங்களின் அடையாளத்தினை இனங்காணுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ரேடியோ சமிக்ஞை தரவுகளை இனங்காணும் எழுத்துடனான ஸ்டிக்கர் நடைமுறையில் பயன்படுத்தப்படாத காரணத்தால், அவற்றை அச்சிடும் தனியார் கம்பனி நீங்கலாக வேறு எந்த தரப்பினரும் எதுவித நன்மையையும் பெறுவதாக அவதானிக்கப்படவில்லை. பயன்பாடு காணப்பட்டாலும் வாகன இலக்கம், மாகாணம், செஸி இலக்கம் போன்ற தரவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட காரணத்தல் 2019 திசெம்பர் மாதம் முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் விநியோகிக்கப்பட்ட 302192 ஸ்டிக்கர்களுக்காக அந்த | இதன் உரிய பயன்பாட்டை பெற்றுக்கொளவது எனின் இலங்கையின் அனைத்து வாகனங்களுக்காகவுமி இந்த ஸ்டிக்கரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன், அதற்காள அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சரவையால் அமைச்சின் செயலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று மற்றும் அதற்கு உதவியாக செயற்திட்டக் குழுவொன்றும் | செலவிடப்படும் பணத்திற்கு பொருத்தமான பயன்பாடு கிடைக்கும் வகையில் அரச நிதி பயன்படுத்தப்பட வேண்டும். |

தனியார் கம்பனிக்கு செலுத்திய ரூபா 153,059,534 ஆன தொகை விளைவற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் இந்த தொழில்நுட்பத்தின் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பொருத்தமான நடவடிக்கைகள் முன்மொழியப்படும். RFID இல் உள்ளது மட்டுபக்படுத்தப்பட்ட அளவிலான தரவுகள் என்பது உறுதியாகும். எனினும் தகவல் தொடர்பாடலுக்கு RFID மாத்திரம் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்படவில்லை. உதாரணமாக இலங்கை பொலிஸ் இந்த தளத்தினை பயன்படுத்தி தகவல்களை பெற்றுக்கொள்வதெனின், அவர்கள் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- RFID வாசிப்பு இயந்திரம்
- மேற்படி உபகரணத்தின் ஊடாக வாகனங்களை இனங்கண்டு எமது தகவல் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடலை பேணக்கூடிய தகவல் கட்டமைப்பொன்று.
- பொலிசுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்காக தகவல் பறிமாற்றல் இலத்திரனியல் சேவையொன்றினை எமது கட்டமைப்பில் நிறுவுதல்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலக்கத் தகடுகள் பல்வேறு அளவுகளில் அச்சிடப்பட்டிருந்ததுடன், அவற்றின் கொள்வனவு விலையும் பல்வேறு விதமாக அமைந்திருந்தது. அவ்வாறே, இலக்கத் தகடுகளில் பொறிக்கப்படும் அனைத்து மேற்பரப்பு தகவல்களும் அனைத்துக்கும் ஒத்திருந்தன. இந்த அடையாளங்களின் தடிப்பு வேறுபட்டிருந்த போதிலும், அது கிரயம் தொடர்பில் தாக்கம் செலுத்துவதில் குறைவான ஏதுவாக இருந்தது. அதன் பிரகாரம் எந்தவொரு அளவிலான இலக்கத் தகடு ஒன்றின் ஒரு சதுர மில்லி மீட்டரின் கொள்வனவு கிரயம் சமானாக காணப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், அதிக பாவனையுடைய மி.மீ. 300 X 80 மற்றும் மி.மீ. 240 X 430 அளவிலான இலக்கத் தகடுகளின் ஒரு சதுர மில்லி மீட்டரின் கிரயம் உயர்வான பெறுமதியை கொண்டிருந்ததுடன், மி.மீ. 520 X 110 அளவிலான இலக்கத் தகடு ஒன்றின் விலை ஒப்பீட்டு ரீதியில் குறைவான பெறுமதியினை கொண்டிருந்தது. மி.மீ. 520 X 110 அளவிலான இலக்கத் தகடு ஒன்றின் விந்பனை விலை வழங்குநரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது ஒரு இலாப எல்லையுடன் ஆகும். அதன் அடிப்படையில் அந்த கொள்வனவு விலையை அடிப்படையாக கொண்டு எஞ்சிய தகடுகளுக்கு செலுத்திய கொடுப்பனவுகளை கருத்திற்கொள்ளும் போது 2015 மே மாதம் முதல் 2019 யூன் மாதம் வரையிலுமான காலப்பகுதியினுள் வெளியிடப்பட்ட இலக்கத் தகடுக்காக ரூபா 719,182,714 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறையின் ஊடாக தெரிவு செய்யப்படும் சேவை வழங்குநரின் ஊடாக குறித்த சேவையை வழங்கும் நடைமுறை, இலக்கத் தகடுகளுக்காக மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளும் நாடு மற்றும் பெறுகைகள் ஆவணத்தில் கோரப்பட்டுள்ள அமைப்புக்குறிப்பீடுகளுக்கு இணங்க அனைத்து பெறுகைகளினதும் ஒரு பகுதியே அன்றி, இந்த திணைக்களத்தின் விருப்பத்திற்கமைய தெரிவு செய்யப்பட்டவை அல்ல. அதனால், ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலக்கத் தகடு ஒன்றின் ஒரு சதுர மில்லி மீட்டரின் கொள்வனவு கிரயம் தொடர்பில் இலக்கத் தகடுகள் தொடர்பில் விலைக்கேள்வி கோரும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கருத்திற்கொள்ளப்பட்டு இருக்கும் என நம்பப்படுகின்றது. | செலவிடப்படும் பணத்திற்கு பொருத்தமான பயன்பாடு கிடைக்கும் வகையில் அரச நிதி பயன்படுத்தப்பட வேண்டும். |

(ஈ) சாரதி அனுமதிப் பத்திரமொன்றை ஒவ்வொன்றும் ரூபா 1,340 படியாக வழங்கும் ஒப்பந்தம் 2016 மார்ச் 26ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் இந்த அனுமதிப்பத்திரத்தின் அச்சிடல் பெற்றுக்கொள்ளப்பட்டு அதனை நடாத்திச் செல்வதற்கு உரிய வழிமுறைகளை பின்பற்றல்.
- மேற்குறிப்பிடப்பட்டவாறு அதனை சுவீகரித்து, அதனை நடாத்திச் செல்வதற்கு முடியாதிருப்பின், 2016ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை நிறைவடைவதாக அதற்கு முன்னைய 07 வருடங்களாக அறிந்திருந்தமையால் முறையான பெறுகை நடைமுறையின ஊடாக புதிய வழங்குநர் ஒருவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

- மேற்படி 02 விடயங்களையும் நிறைவேற்ற முடியாதெனின், அதன் கீழுள்ள தரப்பினரிடம் உரிய வழங்குநருடன் விலைகளை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடி விலைகளை குறைத்தல்.

மேற்படி விடயங்களை நிறைவேற்றுவதற்காக நிலவும் விலைகளின் கீழ் 05 சந்தர்ப்பங்களில் உடடன்படிக்கை காலத்தை நீடிப்பு செய்து 2020 யூன் 30ஆந் திகதி வரையிலும், அந்த வழங்குநருக்கே ஒப்பந்தம் 2020-12-31ஆந் திகதி வரையிலும் இந்த சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடலுக்குரிய பணிகள் உடன்படிக்கை கைச்சாத்திட்ட சேவை வழங்குநரால் மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் இதற்கு முன்னைய ஐயவினாக்களுக்கு பதிலாக மற்றும் அரச கணக்குகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, அது தொடர்பில் அரச கணக்குகள் குழுவிடமிருந்து கிடைத்த கட்டளைகளின் பிரகாரம் 2020 யூலை மாதம் அனைத்து சொத்துக்களும் திணைக்களத்திற்கு பொறுப்பேற்கப்பட்டு அத்திகதி முதல் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை மாத்திரம் பேணப்படுவதுடன், 2021-01-01 ஆந் திகதி முதல் மோட்டார் வாகன திணைக்களத்திற்காக இலங்கை இராணுத்தினால் மேற்கொண்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப ஒப்பந்தத்தின்படி, டொலருக்கு எதிராக ரூபாய் மதிப்பு 10%க்கு மேல் குறையும் போதெல்லாம், உண்மையான விளைவு கணக்கிடப்பட்டு செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறை ஒப்பந்தம் நீட்டிக்கப்படும்போதும், சேவை வழங்குநர் இந்த விலை சரிசெய்தலைக் கோரியிருந்த போதிலும், செலவிடப்படும் பணத்திற்கு பொருத்தமான பயன்பாடு கிடைக்கும் வகையில் அரச நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

கையளிக்கப்பட்டிருந்தது. அதாவது, 05 சந்தர்ப்பங்களில் 51 மாத காலப்பகுதிக்காக காலம் நீடிப்பு செய்யக்கட்ட ஒரு சந்தர்ப்பத்திலேனும் விலைத் திருத்தத்திற்காக கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், 2020 யூன் 01ஆந் திகதி முதல் 06 மாத காலப்பகுதிக்காக அந்த வழங்குநரால் ஒரு சாரதி அனுமதிப்பத்திரத்தின் விலை ரூபா 1,000 எனுமாறு ரூபா 340 இனால் குறைப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. நாட்டில் பணவீக்க நிலைமை தொடர்ச்சியாக காணப்பட்டதுடன், இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து காணப்படும் போது அலகொன்றின் விலையை ரூபா 340 இனால், அதாவது 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு இணங்கியமையால், 2009 ஆம் ஆண்டு முதல் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான அறவிடப்பட்ட ரூபா 1,340 ஆக கொள்விலையினுள் அதிக இலாப எல்லையொன்ற உள்ளடங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக முறையான பெறுகை நடைமுறை முன்னைய ஒப்பந்தக் காலத்திலேயே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது வழங்குநருடன் விலைகளை குறைத்தல் தொடர்பில் கலந்துரையாடியிருந்தால், அந்த வழங்குநரிடமிருந்து அல்லது புதிய வழங்குநர் ஒருவரிடமிருந்து குறைந்த விலைக்கேள்வி சமர்ப்பிப்பதற்கான சாத்தியங்கள் பரந்த அளவில் காணப்பட்டிருக்கும் என்பதை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது. எவ்வாறான போதிலும் அரச நிதியின் சிறந்த பயன்பாட்டுக்காக செயற்திறனான தீர்மானங்களை எடுப்பதற்கு அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு வர முடிந்துள்ளது. இந்த ஒவ்வொரு ஒப்பந்த நீடிப்பும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த விவகாரம் நிதி அமைச்சு அல்லது வேறு எந்த நிறுவனம் அல்லது அமைச்சரவைக்கு ஒரு அவதானிப்பாக குறிப்பிடப்படவில்லை.

மேலும், விலையை குறைக்க நடவடிக்கை எடுக்காததற்கான காரணங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, ஐயவினாவில் கணக்கிடப்பட்ட ரூபா 1,340 ஆக கொள்விலையினுள் அதிக இலாபம் காணப்படுவதாக 2020 யூலை மாதம் தீர்மானிக்கப்பட்டதுடன், ரூபா 1,000 ஆன தொனை அறிவிக்கப்பட்ட பின்னர் அவதானிப்பாக சமர்ப்பித்தல் நடைமுறைக்கு பொருந்தாது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த ரூபா 340 ஆன விலையினை குறைப்பதற்கு மிகவும் தீவிரமான கலந்துரையாடல் ஒன்று அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆரம்பக் கொள்வனவுக் கிரயமான ரூபா 1,340 ஆக தொகை திறந்த மற்றும் போட்டி அடிப்படையிலான விலைகளின் கீழ் அமைச்சரவை

| | |
| --- | --- |
| அமைச்சு.்.திணைக்கள முகாமைத்துவம் தவறியமையால் 2016 மார்ச் மாதம் முதல் 2020 யூன் மாதம் வரையிலும் சுமார் 51 மாதங்களாக அச்சிடப்பட்ட சுமார் 3,075,625 அனுமதிப்பத்திரங்களுக்காக தனியார் கம்பனியொன்றுக்கு சிக்கனமற்ற முறையில் பாய்ந்தோடிய அரச நிதியின் அளவானது ரூபா 1,045,712,500 என அவதானிக்கப்பட்டது. | மட்டத்திலான பெறுகையின் போது தீர்மானிக்கப்பட்ட விலை ஆகும். |

## 3.3 தொழிற்பாட்டு நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட 115 வாகனங்கள் மற்றும் செஸி இலக்கங்களின் முறையற்ற பட்டியலை ஆவணப்படுத்தல் மற்றும் 06 மாதங்களினும் மேற்கொள்ளப்பட்ட 81 வாகனங்கள் மற்றும் செஸி இலக்கங்களின் முறையற்ற பட்டியலை ஆவணப்படுத்தல் அகற்றதல் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட எழுத்துமூல அங்கீகாரம் காணப்படவில்லை. அவ்வாறே, அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் வாகனங்களின் முறைகேடான ஆவணப்படுத்தல்கள் அகற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சிறந்த உள்ளக கட்டுப்பாட்டுக்கான தேவையான நடைமுறைகளை உறுதிப்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவினால் 2015 திசெம்பர் முதல் 2019 மே வரையான காலத்தினுள் 600 வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை இரத்துச் செய்வதற்கு வாகன சாட்டுதல் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த காலப்பகுதியினுள் தொழில்நுட்ப பிரிவினால் பரிந்துரை செய்யப்படாத 223 வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் வாகன சாட்டுதல் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல் கணினிக் கட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரிவுகளின் கோரிக்கையின் அடிப்படையில் மாத்திரம் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் உரித்தினை இரத்துச் செய்தல் இடம்பெறும். கணினிக் கட்டமைப்பில் இரத்துச்செய்த திகதி காண்பிக்கப்படாத போதிலும், குறித்த தகவல்கள் தகவல் கட்டமைப்பில் பதிவு செய்யப்படும் எனப்தும், அந்த கட்டமைப்பின் மென்பொருள் கோளாற காரணமாக அதனை திருத்துவதற்கு தாமதிக்காது நடவடிக்கை எடுத்தல். | -மேற்படி- |
| (இ) | வாகனப் பதிவு இலக்கங்கள் உரிய வரிசைக் கிரமத்தில் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், சில இலக்கங்களை வெற்றிடமாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஏதேனும் இலக்கமொன்றின் கூட்டுத்தொகை 13 ஆக வரும் இலக்கங்களை தவிர்த்து ஏனைய இலக்கங்களை வெற்றிடமாக வைத்திருத்தல் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. அந்த வெற்றிடமாகவுள்ள இலக்கங்களை பயன்படுத்தி வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அனைத்து இலக்கங்கள் | இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உங்களால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்வாறான வாகனங்கள் தொடர்பான தகவல் கிடைக்குமானால் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். தரவுக் கட்டமைப்பில் உள்ள வெற்றிடமான இலக்கங்களை கண்டறிந்து, பின்னர் அந்த இலக்கங்களை நிரந்தரமாக நிறுத்திய (Freeze) | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான தகவல்களும் பத்திரிக்கை அறிவித்தல் ஊடாக பிரசுரிப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பில் ஆராயப்பட்டிருக்கவில்லை. | இலக்கமாக பத்திரிக்கை அறிவித்தல் ஊடாக பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ஈ) | இலங்கை சுங்கத்தினால் தண்டப்பணமாக சுங்கக் கட்டணம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள், சாதாரணமான வண்டிகளாக பதிவு செய்யும் போது சுங்கக் கட்டணம் அறவிடப்பட்டமைக்கான கடிதம், வெளிநாட்டு பதிவுச் சான்றிதழ் மற்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு, முன் இறக்குமதி சான்றிதழ் போன்ற ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குழுவொன்றினால் 2016ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணங்கள் காணப்படவில்லை எனின், திணைக்களத்தின் தொழில்நுட்ப பிரிவின் ஒப்புதலுடன் CMT செஸி இலக்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதாவது, தற்போதுள்ள செஸி இலக்கத்திற்கு அடுத்ததாக 03 எழுத்துகள் மற்றும் வரிசை எண்ணுடன் CMT அச்சிடப்பட்டு இருபுறமும் அரச இலட்சினை அச்சிடப்பட்டுள்ளது.<br><br>அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.<br><br>(i) மேற்கண்ட ஆவணங்கள் இல்லாத நிலையில் மட்டுமே CMT செஸி இலக்கம் வழங்க முடிவு செய்யப்பட்டாலும், பல்வேறு | பதிவுசெய்யப்பட்டுள்ள வாகனத்தின் தரவு மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட புதிய வாகனத்தின் ஆவணங்கள் மற்றும் சுங்கத் தொடர்புத் தரவைச் சரிபார்த்து, புதிய வாகனத்தின் சட்டப்பூர்வமான தன்மையை உறுதிப்படுத்திய பின்னர், இறக்குமதியாளரின் தரப்பில் முறைகேடுகளைத் தடுக்க வாகனத்தினை சட்டப்பூர்வமாக பதிவு செய்யும் நோக்கத்திற்காக ஆணையர் நாயகத்தின் முன் அனுமதியுடன் வாகனத்திற்கு CMT செஸி இலக்கம் வழங்கி வாகனம் பதிவு செய்யப்படுகிறது. இதுபோன்ற பிரச்னைகளைத் தடுக்க, சுங்கத்துறையினரால் ஆய்வு செய்யப்படும் வாகனங்களுக்கான எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மோட்டார் வாகனத் திணைக்களம் மற்றும் சுங்கம் ஆகியவற்றுக்கிடையில் கலந்துரையாடி குறிப்பிட்ட வழிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | -மேற்படி- |

காரணங்களுக்காக 2016 முதல் 2019ஆம் ஆண்டு வரை 80 சந்தர்ப்பங்களில் முறை செஸி இலக்கங்கள் வழங்கப்பட்டன. எனவே, CMT எண்களின் கீழ் தவறான வாகனப் பதிவு செய்ய வாய்ப்பு உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) அச்சிடப்பட வேண்டிய 21 CMT செஸி இலக்கங்களின் விவரங்கள் 2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்க தொழிற்சாலைக்கு தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அந்த செஸி இலக்கங்களை கொண்ட வாகனங்கள் 2021 ஜனவரி வரை பதிவு செய்யப்படவில்லை. மேலும், CMT செஸி இலக்கங்களை அச்சிடுவதற்காக அரசாங்க தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்ட 06 வாகனங்கள் சாதாரண வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

(iii) புதிய செஸி இலக்கம் வழங்கப்பட்ட பின்னர் தற்போதுள்ள செஸி இலக்கம் இரத்து செய்யப்பட வேண்டியிருந்தாலும், பழைய செஸி இலக்கங்களில் 03 வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட சநதர்ப்பங்கள்

காணப்பட்டதுடன், மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் ஒரு செஸி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(iv) அரசுடமையாக்கப்பட்ட செய்யப்பட்ட மிட்சுபிஷி பெஜரோ தொடர்பான அரச பகுப்பாய்வாளரின் அவதானிப்புகளை பரிசீலித்து, வாகனம் உதிரி பாகங்களாக விற்பனைக்கு ஏற்றது என திணைக்களம் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது. ஆனால், உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற குற்றம் என்பதால், வாகனத்தை பதிவு செய்யுமாறு வாகனத்தை வாங்குபவர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, 2016ஆம் ஆண்டு CMT செஸி இலக்கம் மற்றும் பதிவு இலக்கத்துடன் வாகனம் பதிவு செய்யப்பட்டது. எனினும், அத்தகைய தவறு ஏற்பட்டால், அது சரி செய்யப்பட்டதற்கான எந்த சான்றும் காணப்படவில்லை.

(v) 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் திணைக்களத்தால் வழங்கப்பட்ட

CMT செஸி இலக்கங்களை பதிவு செய்யும் போது, சுங்க வரியாக அபராதம் விதித்து சுங்கத்தால் வெளியிடப்பட்ட மோட்டார் வாகனங்களின் பதிவுச் சான்றிதழில் "Brought From Auction" என்பதற்குப் பதிலாக "Recondition" என்று குறிப்பிடப்பட்ட 30 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(vi) CMT செஸி இலக்கத்திற்காக சுங்கப் பதிவுகள் இல்லாத போது, புதிய சுங்கக் குறிப்பு எண்கள் உருவாக்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்ட 08 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டன. இதற்கான அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதிகள் எதுவும் காணப்படவில்லை.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2021 யூன் 30ஆந் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வாகனங்களுக்காக CMT செஸி இலக்கம் வழங்குதல் | எதிர்காலத்தில் தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தாமதமின்றி பதில் வழங்குதல். |
| (ஆ) பழைய வாகனங்களில் இலக்கங்களில் புதிய வாகனங்களை பதிவு செய்தல். | | |
| (இ) பழைய வெற்று பதிவு எண்களுக்குப் பிறகு புதிய வாகனங்களைப் பதிவு செய்தல். | | |

(ஈ) மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வகிபாகத்திற்காக் தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப ஆணையாளர் வழங்கிய பங்களிப்பு

(உ) வருமானக் கணக்குகளின் கணக்காய்வு

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் 3.6, 3.9, 11.2 மற்றும் 11.6 ஆகிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தமது வளங்களை திறம்பட நிர்வகிக்க வேண்டும். எவ்வாறாயினும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அந்த நோக்கங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தாலும், அவற்றை அடைவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படல். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வெற்றிடங்களின் எண்ணிக்கையான 133 இனை நிரப்புவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய வெற்றிடங்களின் எண்ணிக்கை 62 ஆகும். வெற்றிடயங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க அத்தியாவசிய வெற்றிடயங்களை நிரப்புதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகளின் விரிவாக்கம் காரணமாக, நிதிப் பிரமாணத்தின் இணைப்புகளின் கீழ் பதவியணி முன்மொழிவுகளை சமர்ப்பித்து புதிய பதவியை உருவாக்கி இலங்கை நிர்வாக சேவையில் முதலாந் தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்து, 2020 ஆம் ஆண்டளவில் சுமார் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர்களின் முன்மொழிவுகளின்படி அந்த உத்தியோகத்தரால் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்த்த பணிகள் திருப்திகரமாக நடைபெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப ஆணையாளராக, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் அவரது தகுதிகள் மற்றும் தொழில்முறை திறன்கள் எதுவும் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | தகவல் தொழில்நுட்ப ஆணையாளரின் ஊடாக நிறைவேற்ற வேண்டிய பணிகளை மேற்கொள்வதற்காக தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பதவியணிக்கான ஆட்சேர்ப்புகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற வேண்டும். |